RECEIVED
1978-2-24
PERIODICALS
DIVISION
UNIVERSITY ... CAMPUS ★ LIBRARY ★

விலை சதம் 40 ★

ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 மாசி 12 ரபீ அவ்வல் 15 இதழ் 14
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 24-3-78

லாலா சோப்
பிரகாச சலவை!
பளிச்சிடும் வெண்மை!
ஈழம் எங்கும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## கொழும்பு மேற்குத் தொகுதி:

### இன்று வேட்பு மனு தாக்கல்

(கொழும்பு)

கொழும்பு மேற்குத்தொகுதியின் இடைத்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இன்று தாக்கல்செய்யப்படும்.

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன ஜனாதிபதியாக பதவியேற்றதைத் தொடர்ந்து இந்த உபதேர்தல் நடைபெறுகிறது. ஐக்கியதேசியக் கட்சியின்

[6ம் பக்கம் பார்க்க]

# அரசைக் கவிழ்ப்பதற்காக
# மாணவரைத் தூண்டிவிட்டு
# கலவரம் ஏற்படுத்த முயற்சி

## தீயசக்திகளின் நோக்கம் பற்றி கல்வி அமைச்சர்

### பாடசாலைகள் மூடப்பட்டது பற்றியும் விளக்கம்

**மாணவர்களைத் தவறாக வழிநடத்தி பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கச் செய்வதன்மூலம் நாட்டில் இனக்கலவரத்தை ஏற்படுத்த சில சக்திகள் முயற்சியில் இறங்கியுள்ளன. இதன்காரணமாகவே பாடசாலைகளை மூடிவிட உத்தரவிடப்பட்டது.**

**கல்வி அமைச்சர் திரு. நிஜங்கா விஜயரத்தின நேற்று தேசிய அரசுப் பேரவையில் இவ்வாறு கூறினார்.**

பாடசாலைகள் இருதினங்கள் மூடப்பட்டதற்கான காரணத்தை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் விளக்கும்படி சபையில் கோரிக்கை விடுத்ததையடுத்து கல்வி அமைச்சர் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

கல்வி அமைச்சர் மேலும் பேசுகையில் தேவை ஏற்படுமானால் பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப்படலாம் என்று சொன்னார்.

பாடசாலை மாணவர்களைத் திசை திருப்பி பகிஷ்காரத்தில் ஈடுபடச்செய்வதன்மூலம் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி நடைபெறுவதாகக் கூறிய அமைச்சர் இதுதொடர்பாக விசாரணையின் நிமித்தம் சிலர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் சொன்னார்.

பல்கலைக்கழகங்களுக்குமாணவர் தெரிவுசெய்யப்படுவதில் தரப்படுத்தலை மீண்டும் கொண்டுவரவேண்டும் என்று சிலர் தம்முடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் பின்னர் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கச்செய்வதற்கான முயற்சி நடைபெற்றதாகவும் அமைச்சர் கூறினார்.

அப்பாவி மாணவர்களைப் பயன்படுத்திநாட்டில் இனக்கலவரத்தைத் தூண்டிவிட தீயசக்திகள் முயற்சி எடுத்துவருகின்றன. அமைதியைப் பாதுகாக்க சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. தரப்படுத்தலை நீக்கியதன் மூலம் சிங்களமக்களுக்கு எதுவித பாதகமான விளைவும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளப்படும் என்று புனிதத் தந்தத்தின் பாதுகாவலர் என்ற முறையில் தாம் உறுதி கூறுவதாகவும் அமைச்சர் சொன்னார். அரசைக் கவிழ்ப்பதற்காக மாணவர்களைத் தூண்டிவிட்டு குழப்பம் விளைவிக்க விரக்திகொண்ட சக்திகள் முயல்கின்றன. இதன் காரணமாக மாணவர்களைப் பாதுகாக்கவும் சட்டம் ஒழுங்கையும் நிலைநாட்டவும் பாடசாலைகள் மூடப்பட்டன என்று அமைச்சர் விளக்கினார்.

### "சட்டத்தைப் பாதுகாப்பது அரசின் கடமை"

**— பிரதமர் பிரேமா**

பாடசாலைகள் மூடப்பட்டது தொடர்பாக பிரதம மந்திரி திரு. பிரேமதாஸ பேசுகையில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பது அரசின் கடமை. மக்களின் ஆதரவைத் தேடிக்கொள்வதற்கு எல்லாருக்கும் உரிமையுண்டு. ஆனால் அது ஜனநாயகமுறையில் செய்யப்படவேண்டும் என்றார்.

தரப்படுத்தலை நீக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே தீர்மானித்திருந்தது என்றும் இது தேர்தல் காலத்தில் மக்கள் முன் எடுத்துக் கூறப்பட்டதுஎன்றும் பிரதமர் விளக்கினார்.

## ஜனாதிபதி விருந்து:

### கூட்டணி எம். பிக்கள் கலந்து கொண்டனர்

[கொழும்பு]

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அளித்த பகல் போசன விருந்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி.க்களும் நேற்று கலந்துகொண்டனர்.

இந்த விருந்தில் கலந்துகொள்வதென தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்றக் குழு விடுத்த முடிவின் பிரகாரமே இவர்கள் ஜனாதிபதி அளித்த விருந்தில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுக்கொண்டதன் பின்னர் மக்கள் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி திரு. ஜயவர்த்தன நேற்று முதல்தடவையாக விருந்தளித்தார்.

இந்த விருந்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை.

**கனகரும் வந்தார்**

ஜனாதிபதி விருந்தில் பொத்துவில் 2-வது எம். பி. திரு. கனகரத்தினமும் கலந்துகொண்டார். துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வரும் அவர் ஆஸ்பத்திரி டாக்டர்களிடம் விசேஷ அனுமதி பெற்று ஊன்றுகோலின் உதவியுடன் விருந்துக்கு வந்திருந்தார்.

நேற்று இரவு பிரதம

(6 ம் பக்கம் பார்க்க)

# "எல்லோரது மரியாதையையும் பாதுகாக்கப்பாடுபடுவேன்"

## பிரதமர் பிரேமா சங்கற்பம்

### முன்மாதிரியாகத் திகழவும் உறுதி

[கொழும்பு]

நாட்டில் உள்ள பல்வேறு இன, மத மக்கள் மத்தியிலும் அமைதியையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்த பாடுபடப்போவதாக பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா தேசிய அரசுப்பேரவையில் உறுதியளித்தார்.

பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாஸா பதவியேற்றதின் பின்னர் முதல்தடவையாக இன்று சபைக்கு வந்தபொது உறுப்பினர்கள் ஆரவாரமசெய்துவரவேற்றனர்.

பிற்பகல் 2-15 மணிக்கு சபைக்கு வந்து தமது ஆசனத்தில் அமர்ந்தார். அவருக்கு அருகில் திரு. மொண்டேகு ஜயவிக்கிரம அமர்ந்திருந்தார். திரு. பிரேமதாசா பேசிக்கொண்டிருந்தபோது முன்னாள் பிரதமமந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா சபைக்குள் வந்தார்.

திரு. பிரேமதாசா தொடர்ந்து பேசுகையில் நாட்டின் முன்னேற்றத்துக்கு கடின உழைப்பும் ஐக்கியமும் தேவை என்று குறிப்பிட்டதுடன் நாட்டின் சேவைக்காக தம்மை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்வதாகக் கூறினார்.

பல்வேறு மக்களும் மதிப்போடும் மரியாதையோடும் வாழ்வதற்கு பாடுபடுவேன் என்று கூறிய பிரதமமந்திரி ஜனாதிபதி திரு. ஜயவர்த்தனவினால் உருவாக்கப்பட்ட அரசியல்வாதிகளுக்கான நன்னடைத்தை நெறியின்படி ஒழுகப்போவதாகவும் பற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக நடக்கப்போவதாகவும் கூறினார்.

மாணவர்களைத் தூண்டிவிட்டு குழப்பங்களை ஏற்படுத்துவதையோ, வாகனங்களைச் சேதப்படுத்துவதையோ அனுமதிக்கமுடியாது. சகலமக்களுக்கும் சமவாய்ப்பும் தகுதிக்கும்

[5ம் பக்கம் பார்க்க]

## பல்கலைக்கழகங்களில் அமைதி: விசாரணைக்காக இருவர் கைது

[கொழும்பு]

பல்கலைக்கழக வளாகங்களில் எந்தவித அசம்பாவித சம்பவங்களும் நிகழவில்லை என்றும் எங்கும் அமைதி நிலவுவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

நாத் அமரக்கோனும் ஆர். எம். குலரத்தினவும் நேற்று கைது செய்யப்பட்டனர்.

நாத் அமரகோன் முன்னர் திரு. பீட்டர்கெனமன் வீடமைப்பு கட்டிட நிர்மாணத்துறை அமைச்சராக இருந்தபோது அமைச்சின் செயலாளராக இருந்தவர். ஆர். எம். குலரத்தின முன்னர் பல்கலைக்கழக கமிஷனில் அங்கம் வகித்தவர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ இல: MB/605

இன்னத்துரை குலேந்திரசிங்கம், பண்டத்தரிப்பு.
—வழக்காளி

எதிராக

1. சண்முகநாதன் கைம்பெண் மனோன்மணி
2. சின்னத்தம்பி சோமசுந்தரம் பெண்.
3. சிவகாமிப்பிள்ளையும், அராலிமேற்கு எதிராளிகள்

மல்லாகம் டிஸ்திரிக் கோட்டில் MB/605ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978ம் ஆண்டு பங்குனி மாதம் 17ம் திகதி வெள்ளிக் கிழமை காலை 10-30 மணி [17-3-78] தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 3800/-வும் மேலும் ரூபா 3000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1975ம் ஆண்டு ஆவணிமாதம் 31ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1975ம் ஆண்டு மார்கழி மாதம் 19-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 556-05 கொடுக்கவேண்டியிருப்பதாலும் செலவுப் பணத்தில் ரூபா 200/- கொடுபட்டிருக்கிறபடியாலும் தீர்வைத் தொகையில் ரூபா 1000/- கட்டப்பட்டபடியாலும்,

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்கு வட்டுக்கோட்டை கோயிற்பற்று அராலி மேற்கு இறை எருக்கலம்பிட்டியும் குருக்கள் வளவும் நில. இலா ஆறு குழி எட்டரையும் (6 பர $8\frac{1}{2}$ குழி) வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு வண்ணப்புலம் விசுவநாதசுவாமி கோயிலுக்கும் செல்லையா பெண் நாகம்மாவுக்குமுரிய ஆதனங்கள் வடக்கு சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோயிலுக்குரிய ஆதனம் மேற்கு சண்முகநாதன் கைம்பெண் மனோன்மணிக்குரிய ஆதனம் தெற்கு ஒழுங்கையும் வண்ணப்புலம் விசுவநாத சுவாமி கோயிலுக்குரிய ஆதனமும் இதடங்கலும். B 338/97 பதிவு.

சி. செ. பாலசிங்கம்
கொமிஷனரும் மதிப்பாளரும்.

அராலிவடக்கு.
வட்டுக்கோட்டை,
5-2-78
8591

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு 14568

1. சதாசிவம் கந்தையா இல. 13, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். வழக்காளி

எதிராக

1. முத்துக்குமாரு இராமலிங்கம்
2. மூத்துக்குமாரு இராமலிங்கம் மகள் தேவகனி.

இருவரும் இல: 49 கொட்டடி. எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோங்டின் ஈடு 14568-ம் இலக்க தழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணி 1978-ம் ஞு சித்திரை மீ 11 உ (11-4-78) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அப்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 31650/-ம் 7-10-74 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் ரூபாய் 30,000/-க்கு 18 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 775/94

### ஆதனவிபரம்

வடமராகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பச்சிலைப்பகுதி முகமாலைக் கோயிற்பற்று கிளாலி இறை "காரக்காடு தோட்டம்" ஏக்கர் நாற்பது (ஏ. 40) தென்னை மரங்களும் எல்லை கிழக்கும் தொகுதி இராமலிங்கம்பெண் இராசம்மாவின் ஆதனம், வடக்கு ரேமன் கதலிக் சேச்சுக்குரிய அவரிக்காடு [அவரிக்காடு] என்னும் தென்னம் தோட்டம், மேற்கு கிராமச்சபை ரேட்டு பதிவு B 61/132 இவ்வாதனம் அளவைக்காரர் T. கந்தையாவால் 3-2-71ல் அளந்து விபரிக்கப்பட்ட 4946ம் இலக்கப் படத்தில் காட்டப்பட்டது.

இ. கனகரெத்தினம்
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்,

10, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
8598


# 'விசேடக்கூட்டம்'

## பரிசுத்த ஆவி பற்றிய விரிவுரைகள்

வழங்குபவர்கள்: நியூசிலாந்தைச் சேர்ந்த
சங்: வெய்ன் ஹியூஸ்
சங்: பீட்டர் எட்கின்சன்

25-2-78. சனிக்கிழமை காலை 9 மணி தொடங்கி 12 மணிவரை பிரதான வீதியிலுள்ள "பாம் கோட்" ஹோட்டலில் நடைபெறும். அத்துடன் "யாழ்/சியோன் தேவாலயத்தில்" பின்வரும் நேரங்களில் கூட்டங்கள் நடைபெறும்.

| | | | |
|---|---|---|---|
| வெள்ளி | 24-ம் திகதி | பி. ப. | 5-00 |
| சனி | 25-ம் " | பி. ப. | 5-00 |
| ஞாயிறு | 26-ம் " | மு. ப. | 9-00 |
| " | | பி. ப. | 6-00 |

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
8581


# சீட்டிழுப்பு முடிவுகள்

அளவெட்டி வடக்கு சன சமூக நிலையக் கட்டிட நிதிக்காக 20-02-78ல் நடாத்தப் பெற்ற அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் பின்வருமாறு:-

| பரிசில் | | சீட்டு இல. |
|---|---|---|
| 1 | — | 435 |
| 2 | — | 217 |
| 3 | — | 3879 |
| 4 | — | 4880 |
| 5 | — | 1091 |
| 6 | — | 722 |
| 7 | — | 3231 |
| 8 | — | 4772 |
| 9 | — | 2382 |
| 10 | — | 1205 |
| 11 | — | 2862 |
| 12 | — | 1092 |

நிர்வாகசபை.
8593

## சுன்னுகம் பல. நோ. கூ. சங்கம் (வரையறுள்ளது) சுன்னுகம்

### அறிவித்தல்

சுன்னுகம் பல. நோ. கூ. சங்கத்தில் 5000 க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும், கழிவு மா, சீனியும் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன. கேள்விப்பத்திரங்கள் 28-2-78 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிவரை சங்கக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

வெற்றுச் சாக்குகளுக்கும், கழிவுப் பொருட்களுக்கும் தனித்தனி கேள்விப்பத்திரங்களை முறையே ரூபா 250/-, 50/- மீளளிப்பு வைப்புப் பணமாகச் செலுத்திக் காரியாலய வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்

21-02-1978
8583

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு 10816 மானிப்பாய்

1. பொன்னம்பலம் சிவானந்தனும் பெண்
2. சொர்ணம் வழக்காளிகள்

எதிராக

நவாலி, அரசடி

1. துரைஙிங்கம் சடாச்சரமும்
2. பெண் குணபூசணம். எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் ஈடு 10816ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978ம் ஞு (8-3-78) பங்குனி மீ 8ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 5,225/-ம் 18-5-1969 தொடக்கம் 12-1-1970 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 350-50 இதில் தீர்வையால் ரூபாய் 3725/-ம் கோட்டுச் செலவால் ரூபாய் 250/-ம் கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோயிற்பற்று நவாலி இறை "இலமலையும் மறுபிரிவுகளும்" பர. நில. இலா. 20, குளிகள் 12, வீடு இரண்டு கிணறுகள் செய்பயிர்களும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும், இதற்கு எல்லை கிழக்கு கதிர்காமன் கணபதி, கந்தன் பாலனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு ரேட்டு, மேற்கு இராசரத்தினத்துக்கும் ஜெர்மையாவுக்குமுரிய ஆதனம், தெற்கு S. நல்லதம்பி பெண் ஆச்சிக்குட்டிக்குரிய ஆதனம், இதடங்கலும் பிரிவிடப்படாத (1/2) அரைப் பங்கும் அதைச் சேர்ந்தவைகளும், பதிவு இல. K 237/219.

நா. ஸ்ரீரங்கநாதன்
விற்பனவு ஆணையாளரும்,
விலை மதிப்பாளரும்.

6, கன்னுதிட்டி ரேட்டு
யாழ்ப்பாணம்.
7-1-78
8582

# மரண அறிவித்தல்

## நாகமணியர் பசுபதிப்பிள்ளை

இளைப்பாறிய தலைமை ஆசிரியர் நாகமணியர் பசுபதிப்பிள்ளை காலமானுர். இவர் செல்லம்மாவின் அன்புக்கணவரும், தர்மருஜா (பாதுகாப்பு உத்தியோகஸ்தர், இ.போ.ச. கோண்டாவில்), கிறிஸ்கந்தராஜா, ஆகியோரின் அன்புத்தந்தையும் இராசேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் மாமனுரும், கற்பகம், தங்கம்மா, சின்னம்மா, நாகம்மா யேசகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் தம்பிப்பிள்ளை, பெரியதம்பி (இளைப்பாறிய விதானை, எழுவைதீவு), கதிரவேலு (இளைப்பாறிய தலைமை ஆசிரியர், நிர்வாகி, குருகுலம், கிளிநொச்சி), காலஞ்சென்ற இராமலிங்கம், இராமச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும், மலர்மகள் (மருத்துவபீடம், கொழும்பு வளாகம்), கலைமகள், திருமகன் ரவிச்சந்திரன், கிறிரஞ்சனி, சிறிரஜனி, தவச்சந்திரன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-02-78 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆனைக்கோட்டை பொன்னையா ஒழுங்கையில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக குடும்பமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: ப. தர்மராஜா

## வரி விளம்பரம்

### தேவை

அரிசி மில்லில் வேலை செய்யக்கூடியவர்கள் தேவை. நேரில் வரவும். சாந்திமில், வட்டுக்கோட்டை. 8576

யாழ் நகரின் பிரபல ஹோட்டல் ஒன்றிற்கு சமையல்பகுதியில் வேலை செய்யக்கூடியவர்கள் உடன் தேவை. விரும்புவோர் விளம்பர இல. 8588, மே/பா. "ஈழநாடு", யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 8588

# அறிவித்தல்

## இ. போ. ச. பருவச்சீட்டு

கீழ்க்காணும் பாடசாலைகளில் பின்வரும் திகதிகளில் பங்குனிமாத பருவச்சீட்டுக்கள் வழங்கப்படும்.

27—28-2-78: யாழ். வேம்படி. யாழ். மத்திய கல்லூரி, 27- மருதனுமடம். இராமநாதன் கல்லூரி வளாகம், 28- தெல்லிப்பழை மகாஜனு. 1-3-78 மானிப்பாய் இந்து, மானிப்பாய் மகளிர், சாவகச்சேரி றிபேர்க், 1- 2-யாழ்இந்து 2. யாழ். பரியோவான், சாவகச்சேரி இந்து, 3-2-78 யாழ். கன்னியர் மடம், சுண்டிக்குளி மகளிர், சாவகச்சேரி மகளிர், யாழ். இந்து மகளிர்.

4ந் திகதி-சாவகச்சேரி, சுன்னுகம் பஸ் நிலையங்களில் விநியோகிக்கப்படும்.

சாலை அத்தியட்சகர்,
யாழ்ப்பாணம்.
8595

## சண்டேஸ்வரர் திருவிழா

[யாழ்ப்பாணம்]

வண்ணை கடைத்தெரு வேம்படி சித்திவிநாயகர் கோவில் சண்டேஸ்வரர் திருவிழா இன்று நடைபெறுகின்றது.

விழாவின் விசேஷ நிகழ்ச்சியாக சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 'பிள்ளையார் மகமை' பற்றிய சொற்பொழிவும் இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

......

## பிரயாணிகள் கஷ்டம்

[மட்டக்களப்பு]

விவசாயப் பிராந்தியமான ஆயித்தியமலையில் பஸ்தரிப்பு நிலையமின்மையால் பிரயாணிகள் மிகவும் அவதிக்குள்ளாகியுள்ளார்கள். பெரும்போக அறுவடை ஆரம்பித்துள்ளமையால் பிரயாணிகளின் தொகை அதிகரித்துள்ளது. பஸ்சாரதிகள் தமது விருப்பப்படி சில இடங்களில் நிறுத்தியும் நிறுத்தாமலும் செல்வதால் பிரயாணிகள் கஷ்டத்திற் குள்ளாகியுள்ளார்கள்

## பாகிஸ்தான் செல்கிறுர்

[உடுப்பிட்டி]

கொழும்பு மறைக் கல்வி நடுநிலையத்தின் தமிழ்ப் பிரிவில் பொறுப்பாளராகக் கடமை புரிந்த அருட்திரு. இராயப்பு அல்பிரட் இம்மாத இறுதியில் பாகிஸ்தான் பயணமாகின்றுர். அவர் பாகிஸ்தானில் உள்ள லிவர்பூல் மறை மாவட்டத்தில் பணியாற்றுவார். இவர் இளவாலை சென். ஹென்றிகியார் கல்லூரியின் பழைய மாணவராவார்.

ஈழநாடு
The Eelanaadu

## குழப்பத்தில் முடிந்த கூட்டம்

நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் முற்ற வெளி மைதானத்தில் நடந்த இடதுசாரி ஐக்கிய முன்னணியின் கூட்டம் கூச்சல் குழப்பத்தில் முடிந்ததையிட்டு யாருமே பெருமைப்படமுடியாது. மாறாக இந்நாட்டுத் தமிழ்மக்கள் வெட்கமும் வேதனையும் அடையவேண்டும்.

வள்ளுவரைப் பற்றியும் அவர் தந்த திருக்குறளைப் பற்றியும் மேடைகளில் பெரிதாகப் பேசுகின்றவர்கள் இந்த நாட்டுத் தமிழ் மக்கள். ஆனால்

'எப் பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப் பொருள் மெய்ப்
பொருள் காண்பதறிவு'

என்ற குறளைத் தமிழ் மக்கள் மறந்துவிடுகிறார்கள் என்பது வேதனைக்குரிய விஷயம்.

இன்று ஜனாதிபதியாக இருக்கும் முன்னை நாள் எதிர்க்கட்சித் தலைவரான திரு. ஜே ஆர். ஜயவர்த்தன யாழ்ப்பாணத்தில் இதே முற்றவெளி மைதானத்தில் ஐக்கியதேசியக்கட்சியின் பொதுக்கூட்டத்தில் பேசியபொழுது கூச்சலும் கல்வீச்சும் நடந்தது. மேடைக்குப் பின்புறம் அமைக்கப்பட்டிருந்த சிகரத்தை உடைத்து வீழ்த்த முயற்சி செய்யப்பட்டது. மின்சாரம், ஒலிபெருக்கி தடைசெய்யப்பட்டது. கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.

நேற்று முன்தினம் இடதுசாரி ஐக்கியமுன்னணியினர் நடத்திய கூட்டமும் குழப்பத்தில் முடிந்திருக்கிறது.

கூட்டங்களைக் குழப்புவதற்கென்றே ஒரு கூட்டம் இருக்கின்றதா என்ற சந்தேகம் எழுகிறது.

இப்படியே கூட்டங்களைக் குழப்புவதானால் தமிழ்மக்களுக்கு பேச்சுச் சுதந்திரம் எழுத்துச் சுதந்திரத்தில் நம்பிக்கையில்லையென்றே பிறர் எண்ணக்கூடும்.

தமிழ்மக்களுக்குச் சுதந்திரம் வேண்டும் என்றும் தமிழ்மக்கள் பேச்சுச்சுதந்திரம் எழுத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டு அடக்கி ஒடுக்கப்படுகிறார்களென்றும் ஒருபுறம் குரல் எழுப்பிக் கொண்டிருக்கும் தமிழ்மக்கள், தமது பகுதியில் நடைபெறும் அரசியல் கட்சிக் கூட்டங்களைக் குழப்புவதானால் அவர்களின் சுதந்திரக் கோரிக்கைகளே அர்த்தமில்லாமல் போய்விடுமென்பதை உணர வேண்டும்.

கூட்டங்களைக் குழப்புபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள் மட்டுமல்ல கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டியவர்களுமாவர்.

வள்ளுவர் முதல் தமிழ் மக்கள் போற்றும் அமரர் அறிஞர் அண்ணாவரை கூட்டங்களைக் குழப்ப வேண்டுமென்றோ பிறரது கருத்தைக் கேட்கக் கூடாதென்றோ சொன்னதில்லை.

மாற்றுக் கட்சியினர் கூறுவதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் மறுநாளே அதே இடத்தில் கூட்டம் வைத்து அக்கருத்தை எதிர்த்துத் தமது கருத்தைச் சொல்ல உரிமையுண்டு.

யாழ்ப்பாணத்தில் இந்நாட்டின் பெருந்தலைவர்களில் சிலர் பேசிய இரண்டு பெரும் கூட்டங்கள் குழப்பத்தில் முடிந்திருக்கின்றன.

இதனால் தமிழ்மக்களின் பண்பாடும் பாரம்பரியமும் குறைத்து மதிப்பிடப்படுமேயன்றி யாரும் பெருமைப் படமாட்டார்கள்.

இனிமேலும் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமலும் தங்களது பண்பாட்டைப் பாதுகாத்துக் கொள்ளவும் தமிழ்மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

இதேசமயம் அரசியல் பொதுக்கூட்டங்களை ஒழுங்கு செய்பவர்களும் பெருந் தலைவர்களை வரவழைப்பவர்களும் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னெச்சரிக்கையாகச் செய்து கொள்ள வேண்டும். இத்துடன் பொதுக் கூட்டம் காலம், நேரம், இடம் ஆகியவைபற்றிச் சிந்தித்து ஒழுங்குசெய்யப்பட வேண்டியதும் அவசியமாகும்.

# உறங்கும் ஏடுகளுக்கு உயிர்ப்பளிப்பார் யாரோ

— வட்டூர் ந, கடம்பேசுவரன் —

தாவர இனங்களில் சில பூண்டுவகைகள்-துளித்துக் கிளைத்து வளரமுடியாத காலங்களில் நிலத்தின் அடியில் இறந்துவிடாது உறங்குநிலையில் வாழ்ந்து, உரிய காலங்களில் தலைகாட்டி மீண்டும் உறங்குகின்றன. இதுபோன்று தமிழ் மொழியும் சில காலங்களில் பெரும புலவர்களால் உலக மக்களிடையே ஏமாப்புடன் நடைபோடுகின்றது. சிலகாலங்களில் ஏட்டுச் சுவடிகளாய் உறங்குநிலையில் இருந்துவிடுகின்றது. ஒரு காலத்தில் சங்க நூல்களும் ஏமாப்புடன் இருந்தன. இன்று பெருவழக்கில் இல்லாது இருக்கின்றன. சங்க இலக்கியம் போன்றதொரு வாழும் இலக்கியம் படைப்பாரைக் காணும் சந்தர்ப்பம் ஏற்படாதபோதும்கூட அவற்றை நுணுகிப் பருகும் வாய்ப்பை நல்கும் பெரியவர்களும் நம்மைவிட்டுக் காலச் சகதியில் புதைந்து மறைகிறார்கள்.

இலக்கணத்துறையில்பெரும் பாண்டித்தியத்துடன் இலங்கிய வித்துவான், பண்டிதமணி சுப்பையபிள்ளையவர்கள் இந்திய மண்ணில் பிறந்தவர்கள். இந்தியாவிலுள்ள நாவலர் கல்வி வளர்ச்சிப் பணியகத்துடன் இணைந்தவர். அந்தப் பிணைப்பும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை போன்றோருக்கு இலங்கையில் இருந்த இடர்ப்பாடும், நாவலர் மகா வித்தியாலய அதிபராக தமிழ்க் காவலராக எம்நாட்டவர்க்கு உதவும்நிலை வந்தடைந்தது. நிரம்பிய பக்குவம் அடைந்தவர்கள் 'யாதும் ஊரே' என்ற கணியன் பூங்குன்றன் வழியில் நிற்பவர்கள் ஆதலால், பல்லாண்டு காலம் தமர் பிறர் சென்ற பேதமின்றி ஓய்வு பெற்ற பின்னரும்கூட; ஏன் காலன் தன்னை அழைக்கும் வரை ஒவ்வொரு சனி, ஞாயிறு தோறும் சூரியஉதயம் தப்பாததுபோல இவரது வருகையும் தப்பாதுதான் இருந்தது. இளைப்பான வயதிலும்கூட கற்பித்தலில் இளைப்பற்றவராக மிகுந்த உற்சாகத்துடன் தன்பசிமறந்து கற்பிப்பார்.

இவர் தமிழுக்கு ஆற்றிய பணியைப்பத்திரிகைகள் வாயிலாகப் பலர் மனமார வாழ்த்தி நினைவுபடுத்தினார்கள். அதே வேளையில் நாவலர் அறநினைவுகள் அவரால் தமிழுலகத்திற்கு வழங்கப்பட்டநிதி அவரோ தொடர்புபட்ட பிள்ளையவர்கள் விட்டகுறையை நிறைவுபடுத்த 'நாவலர்டிரஸ்டியினர்' தொடர்ந்து செய்யவேண்டிய பணியைக் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை.

ஐயா அவர்களின் மனதில் இந்தக்கவலை வெகுகாலமாக இருந்தது. மனஉழைச்சலை அவர் வெளிப்படையாகக் காட்டிக்கொள்வதில் அர்த்தமில்லை என்றோ அமைதியாக ஆரவாரமின்றிப் பணிசெய்ய வேண்டுமென்று கருதியோ இருந்துவிட்டார். ஆனால் தன்னோடு நெருங்கிப் பழகியவர்களுடன் வேதனையைப்பகிர்ந்து கொள்ளாமலில்லை. திரு. தனஞ்சயராஜசிங்கம் எழுதிய நாவலர்மணிகள் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

"1869ம் ஆண்டில் நாவலர் தம் பாடசாலையின் 20வது ஆண்டு வளர்ச்சி குறித்து வெளியிட்ட அறிக்கையுடன் திரு. டபிள்யு. இராமலிங்கம் பிள்ளை என்பவர் வாயிலாக றசல் துரைக்குத் தம் வேண்டுகோளைத் தெரிவிக்க, றசல் துரை அக்காலக் கல்வி இயக்குநராகக் கடமையாற்றி வந்த ஜே. எஸ். லாறி என்பவருடனும்பாடசாலையினைப் பார்வையிட்டு கல்வி இயக்குநர் தமது பொர்சுக் குறிப்பினை அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்தார் அப்பொழுது லாறி நாவலர் பாடசாலைக்கு உதவிப்பணம் வழங்குவதற்கு விதித்த நியந்தனைகளில் இப்பாடசாலை நிறுவியவரின் நோக்கத்திற்கு மதிப்பு அளிக்கப்படும். சமயக்கல்விக்கு ஊறு விளைவிக்கப்படமாட்டாது என்பதும் ஒன்றாகும். நாவலர் கருத்துக்கொப்ப பிற வகுப்புகளும் நடைபெற வழி இருந்தது. இதனைப் பயன்படுத்திக் காவிய வகுப்புகள் நடைபெற்றுவந்தனவாக அறிகின்றேன். காலத்தின்வளர்ச்சியில் வளருவதற்குப் பதிலாக குலுக்கமடைந்து நின்றது'

நாவலர் கண்ட கனவுகள் பல, அவர் தம் அறநினைவுகள் பல. தமிழுக்காக அவர்விட்டுச் சென்ற பெருந்தொகையான நிதி ஒருபுறம், அவர்வழிநின்று அவர் பேரால் காவிய வகுப்பு என்ற நாமத்துடன் இயங்கிய பாலபண்டித, பண்டிதவகுப்புகளும், சமஸ்கிருதவகுப்புகளும் இலக்கணப்புலவர் சுப்பையாவும், வித்துவான சரவணையூர் பொன்னையாவும், வியாகரண சிரோன்மணிசீதாராமசாஸ்திரியவர்களும் இணைந்து நின்று நடத்திவந்தார்கள். இந்த வகுப்புகள் கூட இலக்கண பாடங்களுடன் தானமைந்தது-விரிவான முறையில்இடம் பெறவில்லையென்பதை மனவருத்தத்துடன் குறிப்பிடாமல் இருக்க இயலவில்லை.

இப்படியாக நடந்து வந்த வகுப்பு ஐயாவின் மறைவுடன் மறைந்துவிடுமா? மறைந்துவிட்டது போலவே தோன்றுகின்றது.

இனியென்ன ஆகுமோ என்ற மனப்புழுக்கமும் நடக்கின்ற வகுப்பைக்கூட நிறுத்தலாமென்ற வேதனையும், 'நாவலர் டிறஸ்டி'யின்பாராமுகமும் ஐயா அவர்களை வருத்தாத நாளில்லை. இது பற்றி ஐயா பலருக்கும் எழுதியுள்ளார்.

நேற்றுவரை தமிழுக்காக வாழ்ந்த இலக்கண அறிஞரை கோவைக்கு உரை வகுத்த பெரியவரை இழந்துவிட்டோம். நாமனைவரும் அவருக்குச் செய்யக்கூடியது மரபுவழியாகத் தமிழ்க்கல்வி வளர வேண்டுமென்ற அவரது அவாவை - நாவலர் நிதியைப் பயன்படுத்தி-இலக்கணப்புலவரின் ஆசையை மனத்திருத்தி, அவரது பேரால் தமிழன்னைக்கு ஏதேனும் செய்வதுவே நாம் அன்னாரின் ஆத்மா சாந்தியடையச் செய்யும் சேவையாயிருக்கும். [அ]

ஆசிரியருக்குக் கடிதம்

## ஏன் இந்தப் பாகுபாடு?

கடந்த 14-2-78ல் நடைபெற்ற மானிப்பாய் கோவிற்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைத் தேர்தலில் உபதலைவர் தெரிவின்போது சிறுபான்மைத் தமிழர் ஒருவர் புறக்கணிக்கப்பட்டது, இன்றைய தனிநாட்டுக் கோரிக்கையில் த வி. கூட்டணிக்கு மிகப் பெரிய ஒரு இழுக்காகும். மேற்படி இயக்குநர் சபைத் தேர்தலில் தே. அ. பேரவை உறுப்பினரால் நியமிக்கப்பட்ட ஒன்பது உறுப்பினரில் திரு. மா. கந்தசாமியும் ஒருவராகும். இவர் மானிப்பாய் கோ. ப. த. வி கூட்டணி மத்திய குழுவின் இணைச் செயலாளரும், வளரும் தமிழர் பொருளாதார இயக்கச் செயலாளரும், மானிப்பாய் பட்டின, சிரியிறுப்பாளர் சங்க உப செயலாளரும் ஆகும்.

தேர்தலின்போது திரு. மா. கந்தசாமிக்கு ஆதரவாக நியமன அங்கத்தவர் இருவரும், மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் ஒருவருமாக மொத்தம் மூன்று அங்கத்தவர்களே ஆதரித்து நிற்க, எதிராக எட்டு அங்கத்தினர்கள் வாக்களித்தனர். இந்த நிலையில் த. வி. கூட்டணியின் ஆதரவாளர்கள் எனப்படுவோர், உண்மையான அந்தரங்கசுத்தியுடன் செயல்படுகின்றார்களா? அல்லது ஆதரவாளரென்ற நிலையிலிருந்துகொண்டு இயக்கத்தின் இலட்சியமான சாதி ஒழிப்புக் கொள்கையைக் குழிதோண்டிப் புதைக்கின்றார்களா என்பது விளங்கவில்லை!

இயக்கத்தின் இலட்சியம் தமிழ் ஈழத்தில் சாதி, சமய பேதமற்றவொரு புதுமைச் சமுதாயம் அமைக்கவேண்டுமென்பதுதான்! இத்தலகைய மனோபாவம் கொண்டவர்களால், சாதி அமைப்புத் தகர்வதற்குப் பதிலாக வளர்க்கப் படும்போலவே தோன்றுகின்றது.

எஸ். கே. சண்முகநாதன்
மானிப்பாய்



யாழ். நுண்கலைமன்றத்தின் ஆதரவில் நாளை சனிக்கிழமை மாலை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் பரதநாட்டிய நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் செல்வி சகுந்தலா துரைராஜசிங்கம் இவர்தான்.

## யாருடையது?

வண்ணார் பண்ணையைச் சேர்ந்த சோதிலிங்கம் என்பவரால் வண்ணை சிவன் வடக்கு வீதியில் கண்டெடுக்கப்பட்ட புகைப்பட 'நெக்கடில் கொண்ட கடிதஉறை ஒன்று "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சிகாட்டிப் பெற்றுக் கொள்ளவும். (இ)

# "என்றோ ஒருநாள் சோஷலிஸம் வந்தேதீரும்"

[வண்ணைப்பண்ணை]

"இலங்கையில் என்றோ ஒருநாள் சோஷலிசம் நிலைத்தே தீரும். இலங்கை ஒரு சோஷலிச நாடாக மலர்கின்ற போதுதான் இலங்கையின் பொருளாதாரம் வளமடையும். மக்களின் வாழ்க்கையில் ஒளியும் மலரும்.'

இவ்வாறு யாழ். கோட்டை முற்றவெளியில் நடந்த இடதுசாரிகள் ஐக்கிய முன்னணிக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய சமசமாசக் கட்சிப் பிரமுகர் திரு. பி. நாகலிங்கம் தெரிவித்தார்"

மக்கள் மத்தியில் தவறான பிரசாரங்களைச் செய்வதன் மூலம் ஆட்சிப் பலத்தைப் பெறும் எந்த இயக்கமும் மக்கள் மத்தியில் நிலைத்து நிற்க முடியாது.

தமிழ் மக்களும் சிங்கள மக்களும், வாழும்நாடு இலங்கை. நாற்பது வீதமான தமிழ் மக்களும், அறுபது வீதமான சிங்கள மக்களும் இருக்கின்றனர். தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக போராடும் இதே வேளையில் அறுபது வீதமான மக்களின் நிலையையும் கவனித்து நடந்து கொள்ள வேண்டும், என்று அவர் மேலும் கூறினார்.

வடபிரதேச கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரும், செயலாளருமான திரு. வைத்திலிங்கம் பேசுகையில், உணவுக் கஷ்டத்தால் ஏற்படும் குறைகளைத் தீர்ப்போம். உணவுப் பொருட்களுக்கிருக்கும் 'கியூ' வரிசையை நீக்குவோம் என்று கூறிய இன்றைய ஆட்சியாளர்கள், கூப்பன்களை எடுத்து சங்கக் கடைகளில் இருந்த கியூ வரிசைகளைத் தான் எடுத்துள்ளனர். மக்கள்முன் புதுமுகங்களாகத் தோன்றிய இன்றைய ஆட்சியாளர்களும், மற்றும் அரசியல் வாதிகளும் புதிய புதிய வாக்குறுதிகளைக் கொடுத்து ஆட்சியைக் கைப்பற்றினர்.

இலங்கையின் பொருளாதாரத்தில் கைவைக்கும் முதல் படியாக சுதந்திர வர்த்தக வலயம் என்ற போர்வையில் எமது சுதந்திர பொருளாதாரத்தை அன்னிய ஆதிக்கத்துக்

(4-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

கடவுள் ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலும் உறைகிறார். ஆகையால் ஒவ்வோர் உள்ளமும் ஈசனுறை கோவிலாகும்.

— குருநானக்

# இந்திரா, சஞ்சய், சுக்ளா மீது வழக்குத் தாக்கல்!

## அரசியல் ஊழல் தொடர்பான திரைப்படத்தை அழித்தனராம்

புதுடில்லி, பெப். 23 முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி மீது டில்லி நீதிமன்றத்தில் மற்றுமொரு வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளது.

அரசியல் ஊழல் தொடர்பான திரைப்படமொன்றை அழித்ததாகக் குற்றம்சாட்டி இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திருமதி காந்தி அவரதுபுதல்வர் சஞ்சய்காந்தி, முன்னாள் தகவல் ஒலிபரப்பு அமைச்சர் சுக்ளா ஆகிய மூவர் மீதும் நேற்று மேற் கூறப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் நீதிபதி திரு. பி. கே. செயின் முன்னிலையில் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி மார்ச் மாதம் 3ம் திகதிவரை மேல்விசாரணையை ஒத்திவைத்தார். (இ)

## 23 வீடுகளின் காவலாளிக்கு 27 ஆயிரம் ரூபா சம்பளம்!

[கொழும்பு]

சுமார் 34,000 ரூபா செலவில் கட்டப்பட்ட 23 வீடுகளுக்கு காவல்புரிந்ததற்காக கடந்த ஒன்றரை வருட காலத்தில், சுமார் 27,000 ரூபா காவலாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம் விமான நிலையத்தில், தேசிய வீடமைப்பு இலாகாவினால் 23 வீடுகள் சுமார் 34,000 ரூபா செலவில் கட்டப்பட்டது.

இதில் 18 வீடுகள் இன்னும் பூட்டப்பட்ட நிலையில்உள்ளது இவ்வீடுகளுக்கான காவலாளிகளுக்கு 27,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலைமைபற்றி அனுராதபுரம் அரசாங்க அதிபர் பிரதமருக்கும், வீடமைப்பு அமைச்சருக்கும் அறிவித்துள்ளார். [ ]

## தந்தி மணியோடர் இன்னும் கிடைக்கவில்லை?

[கரவெட்டி]

கரவெட்டித் தபாற் கந்தோரில் இருந்து பேராதனை வளாகத்திலுள்ள எம். ஞானேந்திரன் என்பவருக்கு இம்மாதம் 11-ம் திகதி அனுப்பிவைக்கப்பட்ட தந்தி மணிஓடர், இதுவரை அம்மாணவனைச் சென்றடையவில்லையாம்.

வழமையாக அனுப்பும் மாதிரியே இம்முறையும் தந்தி மணியோடர் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் மணியோடரை அனுப்பிவைத்த திரு. எஸ். மாணிக்கம் பேராதனை வளாக மாணவனுக்கு இது பற்றிய கடிதமொன்று அனுப்பியதாகவும் கூறப்படுகிறது.

தந்தி மணியோடர் இதுவரை வந்துசேரவில்லை என அம்மாணவன் பதில் அனுப்பியுள்ளதாகக் கூறப்படுகிறது.

### நாடுகள் தோறும்

## மனிதஉரிமைகள் நிறுவனகிளைகள்

ஜெனிவா, பெப். 23 ஐ. நா. மனித உரிமைகள் அமைப்பின் கிளைகளை உலக நாடுகள் தோறும் அமைக்க வேண்டும் இந்தியாஎனஆலோசனை வழங்கியுள்ளது.

ஜெனிவாவில் உள்ள ஐ. நா. மனித உரிமைகள் ஸ்தாபனத்தின் தலைமைக்காரியாலயத்தின் இந்தியப் பிரதிநிதியான திருமதி விஜயலட்சுமி பண்டிட் இந்த ஆலோசனையைச் சமர்ப்பித்தார். [இ]

......

## நந்தினிக்கு பிணை

புதுடில்லி. பெப். 23 நேற்று பொலிசாரால் கைது செய்யப்பட்ட முன்னாள் ஒரிஸா மாநிலமுதல் அமைச்சர் திருமதி நந்தினி சத்பதி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். [இ]

## இருளில் முல்லைத்தீவு

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவுப்பட்டினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் இருளில் மூழ்கியுள்ளது.

மின்சாரஇயந்திரம் பழுதடைந்தமையே இதற்குக் காரணமெனத் தெரிய வருகிறது.

முல்லைத்தீவுப்பட்டின மின்சாரவிநியோகம் பட்டின சபையின் சொந்த இயந்திர மூலமே வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களிலும் இந்நிலை ஏற்பட்டு மின்சாரம் கிருத்தப்பட்டு வெளிச்சம் கிடைத்து வந்தது.

மின்சாரத்தடையால் முக்கியமாக ஆஸ்பத்திரிபாதிக்கப்படுவதுடன் பஸ் நிலையம் மற்றும் அரசாங்க அலுவலகங்களிலும் கஷ்டமேற்படுகிறது. பொதுமக்களும் இத்தவிதி வெளிச்சமின்றி மிகுந்த கஷ்டமனுபவித்து வருகின்றனர். (அ]

### இராணுவத்தினால் 20 ஆயிரம் பேர் படுகொலை!

குவாத்தமாலா, பெப். 23 குவாத்தமாலாவில் 1966ம் ஆண்டு முதல் இன்றுவரை 20 ஆயிரம் பேர் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இத்தகவலை சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. [இ]

## பரதமும் பாட்டும் தமிழர் பெரும் சொத்து

### நடன அரங்கேற்றத்தில் 'அமிர்'

(யாழ்ப்பாணம்)

"எமது மூதாதையர் எமக்கு ஆக்கித்தந்த கர்நாடக இசைக் கலையும் பரதக் கலையும் தமிழ் இனம் ஒன்றுக்கே உரித்தான அரும் பெரும் சொத்தாகும் ஒரு நாடு சகல வளங்களும் பெற்று விளங்கலாம். ஆனால் கவின்திறன் மிக்க கலைவளம் இல்லாத நாடு ஜோடனை செய்யப்பட்ட ஒரு பிணத்துக்கு ஒப்பாகும்."

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் தேசிய அரசுப் பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற திருமதி லீலா ஆறுமுகையாவின் சதங்கை நர்த்தனாலய மாணவி செல்வி அங்கையற்கண்ணி வேதநாயகத்தின் பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே திரு. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:–

"நான் பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்தபோது தமிழ் மாணவர்களாகிய நாம் நமது விடுதியில் இருந்த வானொலியில் ஒரு நாடக சங்கீதத்தைக்கேட்டு மகிழ்வோம். அப்போதெல்லாம் நமது சிங்கள சக மாணவர்கள் நம்மைப் பார்த்துக் கேலி செய்வதுண்டு கர்நாடக இசைபோன்று நாதஸ்வர இசையும் நமக்கே உரித்தானதொன்றாகும். எம். எஸ். சுப்புலட்சுமி தமது கர்நாடக் கானமிர்தத்தால் ஐக்கியநாடுகள் சபையில் உலகத் தலைவர்களையே மயங்கவைத்தார். அதேபோன்று நமது நாதஸ்வரவித்பன்னர்களும் தமது நுண்கலைத்திறனை உலகறிய விளக்கியுள்ளனர். நாதஸ்வர இசைக்கு அமைந்த பரதத்தைத் தமிழ் நாட்டுத் திரைப்படமாகிய தில்லானா மோகனம்பாள் போன்ற திரைப்படங்களிலே தாம் காணக்கூடியதாக இருந்தது.

இந்த மேடையில் தில்லானா சுவையான நாதஸ்வர இசைக்கு அமைந்து எம்மையெல்லாம் கவரக்கூடியதாக இருந்ததை நோக்கும்போது நாமும் தமிழ் கலைஞர்களுக்கு சளைத்தவர்கள் அல்ல என்பதைச் செல்வி அங்கையற்கண்ணி நிரூபித்துவிட்டார் என்றே கூறவேண்டும். செல்வி அங்கையற்கண்ணி தாம் பெற்ற திறமையை உள்நாட்டில்மட்டும அல்லாது திக்கெட்டிலு...

கொட்டி முழங்கி தம் நாட்டுக்கும் மொழிக்கும் அளப்பரிய சேவை செய்யவேண்டும்."

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நாட்டிய நிகழ்ச்சியின் இடைவேளையின் போது செல்வி சிலாதேவி சங்கரனின் வீணை இசை நடைபெற்றது. (பா-இ)

## பிக்கு கொலைவழக்கு

(வவனியா)

வவனியா பிக்கு கொலை வழக்கு வவனியா மேல் நீதிமன்றத்தில் அனுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதி சி. எல். ரி. முனமானே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

இவ்வழக்கில், வவனியா மடுக்கந்த என்ற இடத்தில் பிக்கு ஒருவருக்கு உணவில் நஞ்சுவிதை கலந்து கொடுத்து கொலை செய்து கொள்ளையடித்ததாக குணசேகரா மீதுகுற்றம் சாட்டப்பட்டிருந்தது.

நீதிபதி விசாரணையை ஏப்ரல் 30-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஈ)

# பிரதமர் தவறுசெய்தால் மக்கள் எச்சரிக்க வேண்டும்

## ஆந்திராவில் பிரதமர் தேசாய்!

திருப்பதி, பெப். 23 இந்தியாவில் தனிநபர் சுதந்திரத்தை மீட்க ஜனதாகட்சி மேற்கொண்ட நடவடிக்கைகளினாலேயே உலக நாடுகளில் இந்தியாவின் மதிப்பு மிக அதிகரித்துள்ளது.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் ஆந்திரப் பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

திரு. தேசாய் மேலும் பேசுகையில் கூறியதாவது:

நாட்டின் பிரதமமந்திரி தவறாக நடக்க முற்பட்டால் மக்கள் பிரதமரை எச்சரிக்க செய்யத் தவறக்கூடாது. பிரதமராக இருந்தாலென்ன, சாதாரண பிரஜைகளாக இருந்தால் என்ன எவரும் தவறுசெய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

திருமதி இந்திராகாந்தியின் ஆட்சியில் 5, 6 ஆண்டுகளாக அரசும் அதன் அமைச்சர்களும் ஆட்சியை நீடிக்க விரும்பினார்களே ஒழிய, நாட்டை அபிவிருத்தி செய்யும் பணிகளில் ஈடுபடவில்லை.

தமது பதவியைக் காப்பாற்றிக் கொள்ள நெருக்கடி நிலையைச் சாட்டாக வைத்துக் கொண்டு பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு போட்டதுடன் நீதிச்சுதந்திரத்தையும் குறைத்தது. [இ]

## பாகிஸ்தானில் ஊர்வலத்துக்கு தடை!

கராச்சி, பெப். 23 பாகிஸ்தானில் ஊர்வலங்கள், துப்பாக்கி விற்பனை ஆகியன தடைசெய்யப்பட்டுள்ளது.

பிரிவினைவாதிகள் கடந்த இரண்டு நாட்களாக மேற்கொண்டுவரும் ஆர்ப்பாட்டங்களை அடுத்தேஇராணுவ அரசு இத்தடை உத்தரவை பிறப்பித்துள்ளது. (இ)

## என்றே...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

குட்படுத்த ஏற்பாடு செய்துள்ளனர். இதனால் எமது பாரம்பரிய பொருளாதாரத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

பாராளுமன்ற ஆசனங்களைப் பெறுத போதும் எமது பாரம்பரிய போராட்டங்கள் மூலம் சோஷலிசத்தையும், பொருளாதாரப் பாதுகாப்பையும் நாம் ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது என்றார்.

முன்னாள் நியமன எம். பியும் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரமுகருமான திரு. எம். சி. சுப்பிரமணியம் பேசுகையில், இன்று பேலிப் பொருளாதாரம் மக்கள் முன் கண்துடைப்புக்காக பெயரளவில் காட்டப்படுகின்றன உண்மையான பொருளாதாரத்தை, மக்கள் சுபீட்சத்தை இடதுசாரி ஆட்சியில் தான் மக்கள் காணமுடியும். இந்த நாட்டின் சுயதேவைப் பூர்த்தியை நாம் ஏற்படுத்தியிருந்தும் கூட அவற்றை வேறாடு களைந்து நாட்டை அன்னிய நாட்டுக்கு அடிமைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன, என்றார்.


# வைத்திலிங்கம்ஸ்

∴ உறுதியானதும்
∴ நீடித்து உழைப்பதும்
∴ தன்னிகரற்றதுமான

'றிவர்' பிரான்ட்
கல்வனேஸ்ட் இரும்புத் தகடுகள்

பிரதான விநியோகஸ்தர்களும் இரும்பு பொருட்கள் விற்பனையாளர்களும்

என். வைத்திலிங்கம்
நிறுவனத்தார்

450, பழைய சோனக தெரு,
கொழும்பு–12
தொலைபேசி: 33143-4

கிளை: 138, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530

# "சிந்துவெளி நாகரிககாலம் முதல் ஆடற்கலை சைவத்துடன் வளர்ந்தது"

## நீதிபதி பாலகிட்ணர் உரை

[கொடிகாமம்]

"மக்கள் ஆடற்கலையை சமயத்தோடு இணைத்து வளர்த்து வந்தனர். அதனால் தெய்வமின்றிக் கலையில்லை. கலையின்றி தெய்வமில்லை என்பது பண்டைக்காலமக்களின் முடிவு ஆடற்கலை, சிந்துவெளி நாகரிக காலம்முதல் சைவத்தோடு இணைந்து வளர்ந்தது".

சாவகச்சேரி றிபேர்க் கல்லூரியில் நடந்த நடன அரங்கேற்ற விழாவில் பேசிய, சாவகச்சேரி மாவட்ட நீதிபதி கே. பாலகிட்ணர் மேற்கண்டவாறு கூறினர்.

செல்வி ரஞ்சினி கந்தசாமியின் பரதநாட்டிய அரங்கேற்ற விழாவில் நீதிபதி பாலகிட்ணர் மேலும் பேசுகையில் சிலப்பதிகார காலத்தில், ஆடற்கலை மிகவும் உன்னதநிலையை அடைந்ததென்றும் கூறினர்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் கூறியதாவது:

மனிதகுலத்தின் ஆரம்ப காலம் முதல் ஆடல்கலையும், பாடல்கலையும் ஆடிப் பாடுகின்ற கலையும் ஒன்ருக இணைந்து மனித வரலாற்றிற்கு மெருகூட்டி வந்தன.

ஆடற்கலை மிகவும் தொழில் நுட்பத்தையும் கலை நுட்பத்தையும் ஒன்றிணைக்கும் கலைப்பாலம். ஆதிகாலத்து மக்கள் ஆடற்கலையை பழகி வந்தார்களேயொழிய அதில் உள்ள கலை நுட்பத்தையும், தொழில் நுட்பத்தையும் கற்றுத் தேறவில்லையென்பதனாலே உலகில் ஆடற்கலை உடையவர்கள் மிகச்சிலர். ஆடற்கலை, கலை நுட்பத்தை வெளிப்படுத்துவதால் அதிலுள்ள தொழில் நுட்பத்தை இலகுவில் உணர முடியும். ஆடற் கலையில் உள்ள நுட்பச் செறிவுகளை நல்ல முறையில் விரைவில் கிரகித்து ஆடற்கலையைப் பயில்பவர்களே இன்றைய உலகில் ஆடலில் ஆசான்களாகி விடமுடியும். ஆடற்கலைகளில் உயர்ந்த பரதநாட்டியம் தெய்வீகத் தன்மை வாய்ந்தது. எங்கள் பெருமான் நடராசன் ஆடவல்ல அம்பலக்கூத்தன். அவனின் ஆனந்தத் தாண்டவமே இன்றைய பரத நாட்டியமாகும். இறைவன் எம்மை ஆட்டுவிக்க நாம் ஆடுகின்றோம்.

திரு. எஸ். கே. திரவியநாயம், வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் ஆகியோரும், ஆசியுரை வழங்கினர்கள். (ச)

---

## சங்கச்செய்திகள்

[கொழும்பு]

இலங்கைப் பல்கலைக்கழக ஆயுள் வேத மருத்துவபீடத் தமிழ்ச்சங்க நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. க. இராசரத்தினம், உபதலைவர் ஜனுப் ஏ. ஆர். எம். ஹபீஸ் செயலாளர் ஜனுப் எஸ்.எச். எம். அன்ஸாரி உபசெயலாளர் திரு. இராஜா தர்மராஜா பொருளாளர் திரு. ஐ. நடராஜா உபபொருளாளர் ஜனுப் எம். எல். எம். ராதிக் கணக்காய்வாளர் ஜனுப் எஸ். ரி. எம். என். மரிக்கார் பின்வருவோர் ஒவ்வொரு ஆண்டுக்குரிய பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர் செல்வி கி. இவேஸ்வரி ஜனுப் எம். ஐ. எம். சலீம் திரு. ஹரன் செல்வி எம். கே. ஜனுள் மரீலியா ஜனுப் எம். வி ஏ. வாஹித் செல்வி. பீ ஆறுமுகம் திரு. எஸ். வேலாயுதம்பிள்ளை திரு. நா. சத்தியமூர்த்தி.

## திருப்பணிச்சபை

இணுவில் ஸ்ரீபரராசசேகரப் பிள்ளையார் கோவில் திருப்பணிச் சபையின் அங்கத்தவர்கள் தெரிவு நடைபெற்றது. இதில் அனைவரும் ஏகமனதாகவும் தெரிவு செய்யப்பெற்றனர். தலைவர் திரு. ஆ. சுந்தரம் உபதலைவர் திரு. அ. இராசநாயகம் காரியதரிசி திரு. செ. இரத்தினப்பிரகாசம் உபகாரியதரிசி திரு க. கதிரவேல் தனாதிகாரி திரு. க. சுப்பையா உபதனாதிகாரி திரு. த. தருமலிங்கம்

நிர்வாகசபை அங்கத்தவர்கள் 9 பேர் தெரியப்பட்டனர்.

## வரியிறுப்பாளர் சங்கம்

முல்லைத்தீவு வரின்றுப்பாளர் சங்கம் பொதுக்கூட்டம் தலைவர் திரு. க. இளையதம்பி தலைமையில் முல்லைத்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. க. இளையதம்பி உபதலைவர் திரு. ஞா. செபமாலை செயலாளர் திரு. கி. சரவணபவானந்தன் உப. செயலாளர் திரு. அ. மரியராசா பொருளாளர் திரு.க, கனகசபை செயற்குழுஉறுப்பினர் ஜனுப். அ. நூகில் அமின் திரு. செ. யோசப் திரு. அ. சூசைநாதர் திரு. க. முருகேசு. [அ]

## சீசன் டிக்கட் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

இம்மாதம் 26ம் திகதிவரை பாடசாலைகள் யாவும் மூடப்பட்டிருப்பதால் 27ம் திகதி முதல் வழமைபோல்பாடசாலைகளில் வைத்து பங்குனி மாதத்துக்கான பருவகாலச் சீட்டுக்கள் வழங்கப்படும் என யாழ்ப்பாணம் இ. போ. ச. டிப்போ அத்தியட்சகர் திரு. நா. தியாகராஜா தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதால் இத்திகதி மாற்றங்களை மாணவர்களுக்குத் தாம் அறிவிக்கமுடியாத நிலையிலிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

......

## குண்டசாலை மாணவர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

மன்னுர், வவனியா, யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த குண்டசாலை விவசாயக்கல்லூரி தமிழ் மாணவர்கள் அடுத்த மாதம் 3 ம் தேதி சன்சோனிக் கமிஷன் முன்சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட சகல மாணவர்களும் கமிஷன் முன் சாட்சியமளிக்க யாழ். வருமாறு மாணவர்பிரதிநிதி திரு. என். சன்முகப்பிரபு சகல மாணவர்களையும் கோரியுள்ளார். [கெ இ]

## மிருதங்க வித்துவானுக்குப் பாராட்டு

[யாழ்ப்பாணம்]

ஈழத்தின் பிரபல மிருதங்க வித்துவான் திரு. ஏ. எஸ். இராமநாதனின் சேவையைப் பாராட்டி அவரது மாணவர்கள் அவருக்கு ஒரு விழா வெடுக்கத் தீர்மானித்துள்ளனர். இம்மாதம் 26-ந் திகதி இவ்விழாவை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும் மற்றும் சிலர் இவ்விழாவைப் பெரிய அளவில் செய்ய வேண்டுமென்றும் இதனால் மேலும் இரு வாரத்துக்கு ஒத்திவைக்க வேண்டுமென்றும் கோரியுள்ளதாகவும் ஆனலும் இன்னமும் இதுபற்றி இறுதி முடிவு செய்யப்படவில்லையென்றும் தெரிகிறது.

## மின்சாரத்தை மீதப்படுத்த யோசனை

[கொழும்பு]

மின்சக்தியை மீதப்படுத்த "ரியூப்" பல்ப்புகளையும் "மெர்க்குரி" பல்புகளையும் பாவிக்குமாறு மின்சார சபை பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

மேற்படி 'பல்ப்புகளைப்பாவிப்பதன்மூலம் இப்போது செலவிடும் மின்சாரத்தில் மூன்றில் இரண்டு பங்கை மீதப்படுத்த முடியும் என்றும் வருடாந்தம் 10 கோடி 40 லட்சம் கிலோவாட் மின்சக்தியை மீதப்படுத்தமுடியும் என்றும் சபை தெரிவித்துள்ளது. [இ]

......

## ஆசிரியர்கள் செல்லவேண்டும்

[யாழ்ப்பாணம்]

நேற்றும் இன்றும் பாடசாலைகள் மூடப்பட்டுள்ள போதிலும் ஆசிரியர்கள் வழமைபோல் பாடசாலைகளுக்குச் சென்று அங்கு அசம்பாவிதங்கள் எதுவும் நிகழாமல் கவனிக்கவேண்டும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது என்று யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளைக் கண்காணிக்கவேண்டும் என்றும் அமைச்சு கேட்டுள்ளதாம். [இ]

...

## எல்லோரதும்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திறமைக்கும் முதலிடம் கொடுக்கப்படும் என்று பிரதமர் சொன்னர்.

பிரதமர் தமது பேச்சை முடிக்குமுன் எமது பணிக்கு மதகுருமார் எமக்கு ஆசிவழங்கட்டும். பத்திரிகைகள் வழிகாட்டட்டும். எதிரிகள் எம்மைக் கண்காணிக்கட்டும். நண்பர்கள் உற்சாகமூட்டட்டும், மக்கள் ஆதரவு நல்கட்டும் என்ருர். [ம]


**Regal** Jaffna Daily 4-45, 7-00 & 9-30 p.m.
Jean Tierre Leaue in
**GIRL IS A GUN**
Color Action

From 25-2-78
MICHAEL CAINE
in
**The Romantic English Woman**
(Color)

**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
பஷீராஜாவின்
**மரகதம்** சிவாஜி—பத்மினி நடித்த (புதிய பிரதி)
24.2.78 நிதியுதவிக்காட்சி பி. ப. 2.30 மட்டும்
**"நிச்சய தாம்பூலம்"**
சனி, ஞாயிறு (25, 26-2-78) காலை 8-30 மணிக்கு மட்டும்
**BLACK MOUNTAIN**

**ஸ்ரீதர்** தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
அனைவரின் வேண்டுகோளுக்கிணங்க
**இன்ஸ்பெக்டர் மனைவி**
வருகிறது ஜெமினி, பத்மினி, ராதா நடித்த **சித்தி**

**50-வது** வெற்றி நாளை நோக்கி
**ராணி** (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
வி. பி. கணேஷன் — சுமாக்ஷினி
ராம்தாஸ் — ஜெனிட்டா நடித்த
**நான் உங்கள் தோழன்**
26- திகதி சகல காட்சிகளிலும் நான் உங்கள் தோழன், கலைஞர்கள் மேடையில் தோன்றுவார்கள்

**வின்ஸர்** யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
**மூன்று முடிச்சு**
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

**ராஜா** தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
[யாழ்ப்பாணம்]
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா-சோ-விஜயகுமார் நடித்த
**மேயர் மீனுட்சி**

இரு தினங்கள் மட்டும்
**வெலிங்டன்** (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - பத்மினி நடித்த
**ராணி சம்யுக்தா**
[புதிய பிரதி]

கொட்டகை நிறைந்த காட்சியுடன் நடைபெறுகிறது
**லிடோ** (யாழ்.நகர்) போன் 7693
முத்துராமன், சிவகுமார், சுஜாதா நடித்த
**உறவு சொல்ல ஒருவன்**

**மனோஹரா** (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - ஈ. வி. சரோஜா
**பாக்கிய லக்ஷ்மி** (புதிய பிரதி)

**Rio** NOW SHOWING
Jerry Cotton in
**BROADWAY DEADLY GOLD**
From 26th MURDER
Count Down To Dooms Day

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-30.
**Last Granade**

**வெல்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30,
சிவாஜி — பத்மபிரியா
**வைரநெஞ்சம்**

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
ஜெய்சங்கர் நடித்த
**துணிவே துணை**

Y. M. C. A.
**TALENT CONTEST**
Saturday 25-2-1978 5. P. M.
Chundikuli Girl's College Hall
Tickets Rs 5/-, Rs 2/- available at the gate.
8590

### தரப்படுத்தலை நீக்கியதால்

# சிங்கள மாணவருக்கு அநீதி இழைக்கவில்லை

## கல்வி அமைச்சு அறிக்கை

### கலவரத்தைத் தூண்டினுல் கடும் நடவடிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் நீக்கப்பட்டாலும் இதனல் எந்தஒரு மாணவருக்கும் அநீதி இழைக்கப்படமாட்டாது.

தரப்படுத்தல் 'நீக்கப்பட்ட'தால் பல சிங்கள மாணவர்களுக்கு பல்கலைக்கழகங்களில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக தவறான கருத்துக்கள் பரப்பப்பட்டுள்ளன.

அரசியல்ரீதியில் அரசுக்கு எதிராக இனக்கலவரத்தை ஏற்படுத்தும் நோக்குடன் போராட்டத்தை விரும்பும் சிலர் இந்த தவறான கருத்துக்களை பரப்பியுள்ளனர். இவ்வாறு சொற்களால் இனக்கலவரத்தை ஏற்படுத்தமுயல்பவர்கள் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு கல்விஅமைச்சு விடுத்துள்ள விசேட அறிக்கையில் எச்சரித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பல்கலைக்கழக மாணவர்களையும் அப்பாவி பாடசாலை மாணவர்களையும் அரசுக்கு எதிராக திசைதிருப்பிவிடுபவர்களினல் அரசு தனது கொள்கைகளைக் கைவிடமாட்டாது.

பல்கலைக்கழக அனுமதிபற்றிய விபரங்களை வெளியிட்ட பின்னர் இவ்வாறு குழப்பங்களை ஏற்படுத்த வாய்ப்பு ஏற்படாது என்று கருதியவர் இப்போது இத் தவறான கருத்தைப் பரப்பி மாணவர்களிடையே பயத்தை ஏற்படுத்தி கிளர்ச்சியைத்தூண்ட முனைந்துள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்லூரி நிர்வாகிகள் ஆகியோர் அரசுக்கு எதிரான விஷமத்தனமான சக்திகளால் வழிநடத்தப்படக்கூடாது.

தரப்படுத்தல் நீக்கப்படுதலை எதிர்த்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து உடனடியாக வெளியேற்றப்படுவார்கள் என்றும் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவர் என்றும் கல்விஅமைச்சு எச்சரித்துள்ளது.

### யாழ். வளாக மாணவர் மன்றம் அறிக்கை

[யாழ்ப்பாணம்]

தரப்படுத்தலை நீக்கியமையை எதிர்த்து சர்வ வளாக மாணவர் மன்றம் என்று தங்களை கூறிக்கொள்ளும் அமைப்பு ஒழுங்கு செய்திருக்கும் "வகுப்புவாதரீதியில் பகிஷ்கரிப்பை ஒழுங்கு செய்ததின் மூலம் இலங்கைப் பல்கலைக்கழக மாணவர் மன்றங்களும் எமது நாடும் வெட்கப்படவேண்டியதொரு மாபெரும் தவறை சர்வ வளாக மாணவர் மன்றம் என்று கூறப்படும் அமைப்பு செய்துள்ளது"

மேற்படி அமைம்பு முறைப்படி அமைக்கப்பட்டது அல்ல, என்பதனை சர்வ வளாக மாணவர் மன்றங்களின் சார்பில் செயல்படும் உரிமை அதன் தலைவர் என குறிப்பிடப்படும் வித்தியோதய மாணவர் மன்றத் தலைவர் இந்திரவன்ச டீ சில்வாவுக்கு இல்லை என்பதையும் இவ்வண்ணம் செயல்பட்டதன்மூலம் அவர் ஒரு மாபெரும் குற்றத்தை விழைத்துள்ளார் என்பதையும் நாட்டு மக்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். யாழ். வளாக மாணவர்மன்றம் மேற்படி பகிஷ்கரிப்பை நிராகரிப்பதுடன் இத்தகைய வகுப்புவாத ரீதியான தேசவிரோத சக்திகளை வன்மையாகக் கண்டிக்கின்றது என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களிடையே இனரீதியான நாசகார சக்திகள் செயல்படுவதை எமது நாடு ஒருபோதும் அனுமதிக்கமாட்டாது என நம்புகிறோம். மேற்படி வளாகங்களில் பலம்பெற்றுள்ள இடதுசாரி இயக்கங்கள் வெளிப்படையாகவே தங்கள் நிலைமையினை தெளிவுபடுத்தவேண்டும் என்று யாழ். வளாக மாணவர் மன்றம் வலியுறுத்துகிறது. இந்திரவம்ச சில்வா மாக்ஸிய இயக்கம் டீ என்று தம்மை அறிவித்துள்ள தர்மசேகர குழுவை சார்ந்தவர் என்பதை நினைக்கும்போது எமது மாணவர் மன்றம் மிகுந்த வேதனை அடைகிறது.

இத்தகைய பல்கலைக்கழக மாணவர் மன்றங்களின் வீர மிகு வரலாற்றில் கரி பூசமுனையும் வகுப்புவாதிகளதும் இரட்டை வேடதாரிகளதும் நடவடிக்கைகளை முறியடிக்குமாறு சர்வ வளாக மாணவர்களையும் யாழ். வளாக மன்றத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறது என அவர் தெரிவித்துள்ளார்.

### கூட்டணி......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மந்திரி திரு. பிரேமதாசா அளித்த விருந்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நாடாளுமன்றக் குழுவின் தீர்மானப்படி கலந்துகொண்டனர். [ம]

### இன்று வேட்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சார்பில் அநுராபஸ்தியானும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் டி. டபிள்யு. அபயக்கோனும், லங்காசமசமாஜக் கட்சியின் சார்பில் பேர்னுர்ட் சொய்சாவும் போட்டியிடுகிருர்கள். இவர்கள் தவிர மேலும் ஒன்பது பேர் இந்த இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்குக் கட்டுப்பணம் கட்டியுள்ளனர். (ஐ)

### "மாணவர், ஆசிரியர்கள்

# இயன்றவரையில் அரசியலில் ஈடுபடக் கூடாது"

### — வவுனியா எம். பி.

[வவுனியா]

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் இயன்றவரையில் அரசியலில் ஈடுபடக்கூடாது ஆனல் இன்றைய அரசியல் சூழ்நிலை காரணமாக இலங்கையில் மட்டுமல்ல இந்தியா மற்றும் வெளிநாடுகளிலும் மாணவர்கள் அரசியலில் குதித்துள்ளார்கள்.

வவுனியா மகாவித்தியாலய புதிய அதிபர் திரு வீ. சிவஞானத்தை வரவேற்பதற்காகவும் முன்னைய அதிபர் திரு கா. லோகசிங்கத்தின் சேவையைப் பாராட்டுமுகமாகவும் பெற்ருர் ஆசிரியர் சங்கத்தினல் ஒழுங்குசெய்யப்பட்ட விழாவில் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினர்.

சங்க உபதலைவர் திரு. அலெக்சாந்தர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. தா. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

வவுனியாத்தொகுதியில் வளமும், குளமும், நிலமும் உண்டு. அவற்றை சிறந்த முறையில் பயன்படுத்த வவுனியா வாழ் மக்களின் கல்வி வசதிகள் சிறந்த முறையில் ஏற்படவேண்டும். அப்படியான சிறந்த கல்வியைக் கொடுக்கவேண்டியது ஆசிரியர்களின் கையிலேதான் உண்டு. வவுனியாவில் பிரத்தியேகமான முறையில் கல்வியைப் பெற ஸ்தாபனங்களும் இல்லை. அப்படியிருந்தாலும் மக்களிடம் பணமும் இல்லை. ஆகையால் ஏழைமாணவர்களின் கல்வி வவுனியாவில் ஆசிரியர்களின் கையிலேதான் உண்டு மாணவர்களது இயல்பூக்கம் திசைதிருப்பப்படாமல் பாதுகாப்பதும், மாணவர்களை ஒழுக்கமுள்ள நற்பிரஜைகளாக்குவதும் ஆசிரியர்களின் கடமையாகும் என்றும் குறிப்பிட்டார்.

புதிய அதிபர் திரு. பி வி. சிவஞானம் உட்பட பல பெற்ருேர்களும் உரையாற்றினர். சங்கச் செயலாளர் திரு. எப். ஆர். பங்குராஸ் நன்றி கூறினர். [ஐ]

### மரண அறிவித்தல்

### ஐ. ஏரம்பமூர்த்தி

பருத்தித்துறை விஞயகமுதலியார் வீதியைச் சேர்ந்த (இளைப்பாறிய ஆசிரியர் சித்தி விநாயகர் வித்தியாசாலை, பருத்துறை) ஐ ஏரம்பமூர்த்தி அவர்கள் 22-2 78ல் காலமானர். அன்னரின் ஈமைக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் பருத்தித்துறை பொது மயானத்தில் நடைபெறும்

8595

### "தவறை உணர்ந்துள்ள

# தலைவர்கள் மக்கள் முன்பு வரமுடியாமலிருக்கின்ருர்கள்

### மட்டுநகரில் 'வாசுதேவா' உரை

[மட்டக்களப்பு]

தமிழ்பேசும் மக்களதும், தொழிலாள, விவசாய வர்க்கத்தினதும் ஒருமைப்பாட்டினலும் இந்த நாட்டில் தொழிலாளர் அரசை தோற்றுவிக்க முடியும். ஆயினும் தமிழ் மக்களுக்காக நாட்டை பிளவுபடுத்தமுடியாது"

சமசமாஜக்கட்சியின் புரட்சிவாத] தலைவரான திரு. வாசுதேவநாணயக்கார மட்டக்களப்பு மாநகரமண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

மேற்படி கருத்தரங்கு அரசாங்க புகையிரத ஊழியர் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையினல் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது

ஜனப் எஸ். ஏ. சகாப்தீன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் கலாநிதி குமார் டேவிட்டும் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

திரு வாசுதேவநாணயக்கார பேசுகையில் அடிக்கடி சபையிலிருந்து கேள்விக்கணைகள் தொடுக்கப்பட்டன. அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது! தமிழ்மக்களுக்காக இந்நாட்டைபிர்த்துக்கொடுக்க முடியாது. ஆனல் தமிழர்கள் பாரம்பரியமாக வாழும் பிரதேசங்களில் சுயநிர்ணயஉரிமையுடன் வாழவும் நீதிநிர்வாக மொழியாக தமிழை உபயோகிக்கவும் எனது அரசாங்கம் அனுமதிக்கும். தமிழ் மக்களின் மாபெரும் சக்தியும் எம்முடன் ஒன்றிணைவதனுலேயே தொழிலாள சோஷலிச ஆட்சியை மலரச்செய்ய முடியும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை மொழிப் பிரச்னையைகடந்தகாலங்களில் ஆட்சிநடாத்திய முதலாளித்துவ தலைமைகள் பாழடித்துவிட்டன, மொழிப்பிரச்னை இன்று நாட்டினை பிரிக்கும் அளவிற்கு வளர்ந்து பெரியதொரு சர்ச்சையாகிவிட்டது.

### தொழிலாளர் ஆட்சி

1970ம் ஆண்டு, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து தொழிலாளர் ஆட்சியை அமைக்கும் திட்டத்துடனேயே கூட்டுச்சேர்ந்தது ஆனல் தலைவர்கள மந்திரிசபையில் இருக்கும்பொழுது நான் கிளர்ச்சிக்காரர்களுடன் சிறையில் அடைக்கப்பட்டேன் என்னைப்பற்றி தலைவர்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தனது தந்திரோபாயத்தினல் சமசமாஜத் தலைவர்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் இருந்தனர். இதனல் கட்சியின் கொள்கைகள் அமுல் நடத்தப்படவில்லை. பல தடவைகளில் கட்சியின் மாநாட்டைக் கூட்டும்படி நான் சிறையிலிருந்தபோதும், வெளியே வந்தபோதும் வேண்டுகோள் விடுக்கப்பட்டன. ஆனல் தலைவர்கள் தாங்கள்செய்ததவறை உணர்ந்து மக்கள் முன்னிலையில் இன்னும் வரமுடியாமல் இருக்கிருர்கள்.

### முதலாளித்துவ கட்சிகள்

ஐக்கியதேசியக் கட்சியும் ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியும் முதலாளித்துவக் கட்சிகளே. உள்நாட்டில் தேசியமுதலாளிகளினதும், வெளிநாட்டு முதலாளிகளதும் பொருளாதாரத்தையும் நம்பியுள்ளன. இவற்றின் ஆட்சியில் தொழிலாளர் உரிமைகள் முற்ருக மறுக்கப்பட்டுவிட்டன. எமக்கு தேர்தல் முக்கியமல்ல. தொழிலாளர்களை ஒன்றிணைத்து ஒரு கூட்டுமுன்னணியை உருவாக்குவதே நமக்குள்ள முக்கிய பணியாகும் இந்த ஒற்றுமை மூலமாக. தேர்தல் நடாத்தப்படாவிட்டாலும் தொழிலாளர் நடவடிக்கைகள் மூலம் ஆட்சியைக் கைப்பற்றி தொழிலாளர் ஆட்சியை மலரச் செய்யவேண்டும். தனது விருப்பப்படி ஜே. ஆர். ஜயவர்த்தனவோ ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவோ ஆட்சிக் காலத்தை கூட்டுவதற்கு தொழிலாளர் அனுமதிக்கக் கூடாது.

தொழிலாளர்ஆட்சி மலரும்போது இந்தநாட்டில் எவ்வித இன, சாதி, மத பேதமும் இருக்கமாட்டாது. [க]

இப்பத்திரிகை "ஈழநாடு. லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெலிங்டன் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம்ஆண்டு பெப்ரவரி 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389, Registered as a Newspaper in Srilanka